இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb. 1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 03 | திகதி : 25.02.2024 | விலை : 50.00

## தவக்காலத்தில் செபத்தின் வழியாகப் பாவ வாழ்வில் இருந்து விடுபட்டு மனம் மாறியவர்களாகப் பிறரன்புப் பணிகளில் ஈடுபடுவோம்



### தவக்காலச் செய்தியில் யாழ். ஆயர்

யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் குருக்கள் துறவியர் பொது நிலையினர்களுக்குத் தமது தவக்காலச் சுற்று மடலை அனுப்பி வைத்துள்ளார்.

அச்சுற்று மடலில், தவக்காலம் மூன்று விடயங்களை எமக்கு ஞாபகப்படுத்துகிறது. அவையாவன: இறை வேண்டல், உண்ணா நோன்பு, தர்மம் எனவும் இவ்வாண்டு இறைவேண்டல் ஆண்டாக அமைவதனால், குறிப்பாக இத்தவக் காலத்தில் எமது செப வாழ்வில் வேரூன்றி வாழ வேண்டுமெனவும் அழைப்பு விடுத்திருந்தார். தவக்காலத்தில் நாம் செபிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, தவக்காலத்தில் நாம் செபிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, எமது செப வாழ்வின் தரத்தை உயர்த்த வேண்டும். இதற்கு உதவும்படி தூய ஆவியானவரிடம் வரம் வேண்டுவோம் என ஆயர் அவர்கள் தமது சுற்று மடலில் முன்மொழிந்துள்ளார்.

(ஆயர் அவர்களின் முழுமையான சுற்று மடலை பக்கம் 2ம் காண்க.)

## ஓய்வு நிலை ஆயர் தலைமையில் ஊர்காவலில் லூர்து அன்னை பெருவிழா



ஊர்காவற்துறை புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபியில் அன்னையின் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜெயறஞ்சன் அடிகளின் ஒழுங்குபடுத் தலில் கடந்த 11ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் பேரருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

இத்திருப்பலியில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட் தந்தை ப.யோ. ஜெபரட்ணம், அருட்தந்தையர்கள், அருட்சகோத ரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## புனித அந்தோனியாரின் திருப்பண்டம்

### பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில்



வத்திக்கான் உரோமாபுரியில் அமைந்துள்ள புனிதர்களின் திருப்பண்டப் பேராலயத் திலிருந்து யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை வழிகாட்டலில் பாசையூர்ப் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வ நாயகம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மறைமாவட்டத்திற்கு எடுத்துவரப்பட்ட புனித அந்தோனியாரின் திருப்பண்டம் மக்களின் வணக்கத்திற்காகப் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வு கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றது. யாழ். ஆயர் அவர்கள் திருப் பண்டத்தை ஆலயத்தில் வைத்துத் திருப் பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்களெனப் பலரும் கலந்து செபித்தனர்.

## விசுவமடுவில் புதிய முன்பள்ளி



விசுவமடு புனித இராயப்பர் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வந்த புனித இராயப்பர் முன்பள்ளிக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டட திறப்பு விழா கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து முன்பள்ளிக் கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

அத்துடன் தர்மபுரம் பங்கில் பணிபுரியும் வியாகுல அன்னை மரியின் ஊழியர் சபை அருட்ச கோதரிகளின் பணித்தள மடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெற்றது. மடத்திற்கான அடிக்கல்லை யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்கள் நாட்டிவைத் தார். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அடிகள், முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை, வியாகுல அன்னை மரியின் ஊழியர் சபை தலைமை அருட்சகோதரி டெக்லா மேரி, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ். ஆயருடனான சந்திப்புக்கள்




நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதரகத் துணைத் தலைவர் இவான் ருட்ஜென்ஸ் அவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந் துரையாடினார். இச்சந்திப்பு கடந்த 08ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

கார்மேல் சீர்திருத்த சபையின் மாகாண முதல்வர்



இந்தியாவின் கோவா மறைமாவட்டக் கார்மேல் சீர்திருத்தத் துறவற சபையின் மாகாண முதல்வர் அருட்தந்தை சாள்ஸ் செராவ் அடிகள் யாழ். மறைமாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஆயருடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். இச்சந்திப்பு கடந்த 7ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## போதைப் பொருளுக்கு எதிராக சர்வமதத்தலைவர்கள் கவனயீர்ப்பு




போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழ். மாவட்ட சர்வமதத் பேரவையின் ஏற்பாட்டில் முன்னெ டுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் கடந்த 13ஆம் திகதி யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

'போதைப்பொருள் பெருந்தீமை யிலிருந்து எம்மையும், எமது சந்ததியினரையும் பாதுகாப்போம்' எனும் கருப்பொருளில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பேரவைத் தலைவர் சிவ ஸ்ரீ கிருபானந்தக் குருக்கள், அருட்தந்தை ராஜ்குமார், யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம், யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், மௌலவி சுபியான், மதத் தலைவர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய

# இறைமக்களுக்கு விடுக்கும் தவக்காலச் சுற்றுமடல்

AD JESUM PER MARIAM



## கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!

இவ்வாறம் தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். இறை நம்பிக்கையாளர்களாகிய உங்கள் இறை நம்பிக்கையைப் புதுப்பித்து ஆழப்படுத்த இத் திருமடலின் வழியாகச் சாத்தியமான வழிமுறை களைக் கூறி ஊக்கப்படுத்த விரும்புகின்றோம்.

தவக்காலம் மூன்று விடயங்களை எமக்கு ஞாபகப்படுத்துகின்றது. அவையா வன: இறை வேண்டல், உண்ணா நோன்பு, தர்மம். இவ்வாண்டு இறை வேண்டல் ஆண்டாக அமைவதனால், குறிப்பாக இத்தவக்காலத்தில் எமது செப வாழ்வில் வேரூன்ற அழைத்து நிற்கின்றோம்.

செபம் இன்றியமையாத ஒரு தேவையாகவுள்ளது. குறிப்பாக எமக்காகவும், எம் நாட்டிற்காகவும், ஏன் முழு உலக அமைதி வாழ்விற்காகவும் செபிப்பது எமது கட்டாயக் கடமையாகவுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் உலகம் உண்மையில் மூன்றாவது உலகப் போருக்குள் மெது மெதுவாக நகர்கின்றது எனக் கூறுகின்றார். சிறப்பாக வல்லரசுகளின் போர்கள் ஓயத் தினமும் மன்றாடுவோம்.

இத்தவக்காலத்தில் நாம் முன்மொழிவது யாதெனில், நாம் செபிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, எமது செப வாழ்வின் தரத்தை உயர்த்த வேண்டும். இதற்கு உதவும்படி தூய ஆவியானவரிடம் வரம் வேண்டுவோம்.

"நாம் செபம் செய்யத் தடையாகவுள்ளவற்றைக் கடந்து செபிக்கும்போது, 'நாம் யார்'? என்பதைச் செபம் உணர்த்துகின்றது" என ஆன்மீக எழுத்தாளர் ஹென்றி நௌவென் குறிப்பிடுகின்றார்.

எமது உடலுக்கு உணவு அவசியமானது என்பதைவிட எமது ஆன்மாவுக்குச் செபம் அவசியமாகின்றது. உடலால் விரதம் இருக்க முடியும் ஆனால் ஆன்மாவால் அது சாத்தியமற்றது.

புனித அன்னை திரேசா குறிப்பிடும் போது சொல்வார்: "செபம் யதார்த்தங்களை மாற்றுகின்றது என நம்பினேன் ஆனால் செபமே எம்மை மாற்றுகின்றது. அதனா லேயே நாம் யதார்த்தங்களை மாற்றக் கூடியதாகவுள்ளது".

எனவே இத் தவக்காலத்தில் செபத்தின் வழியாகப் பாவ வாழ்வில் இருந்து விடுபட்டு மனம் மாறியவர்களாகப் பிறரன்புப் பணிகளில் ஈடுபடுவோம். சிறப்பாகப் பிறர் மட்டில் உள்ள கோப உணர்வுகளைக் களைவோம். பிறர் மட்டில் ஆக்கபூர்வமற்ற வீண் விமர்சனங்கள், ஆவலாதி அவதூறுப் பேச்சுக்களைத் தவிர்த்து மன்னித்து, மறந்து, நேசித்து வாழ்வோம்.

"மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாகக் கடவுளின் வாய்ச் சொல் ஒவ்வொன்றாலும் உயிர் வாழ்கின்றான்" (மத். 4:4) என்ற இயேசுவின் வார்த்தைக்கு அமைவாக எம் பாவங்களுக்காகச் சிலுவைப் பாதையில் பயணிக்கும் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

### தவக்காலத் திருயாத்திரைகள்

இத் தவக்காலத்தில் ஆடம்பர வாழ்வைத் தவிர்த்து முடிந்த வரை எமது மறைமாவட்டத்தில் உள்ள யாத்திரை ஸ்தலங்களுக்குச் செப உணர்வுடன் திரு யாத்திரை மேற்கொள்வோம். குறிப்பாக கல்வாரி, சாட்டி சிந்தாத்திரை அன்னை திருத்தலம், பாலைதீவு, கச்சதீவு போன்ற இடங்களில் இந்நாட்களில் விசேட வழி-பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் கலந்து பலன் பெறுவோம்.

### அரசியல் நிலைமை

எம் நாடானது இன்று அரசியல், பொருளாதார நிலையில் மிகவும் நலிந்து, பலவீனம் கண்டுள்ளது. எம் நாடு சுதந்திரம் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்த நிலையிலும், போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான நிலையான தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை. மாறாக அவர்களது உரிமைகளை நிராகரிக்கும் போக்குகளே படிப்படியாக அதிகரித்து வருகின்றன. எம் மனங்களில் அமைதியில்லை. எதிர்காலம் மட்டிலான நம்பிக்கையீனமே வலுப்பெறுகின்றது. வறுமை எல்லோரையும் பாதித்துள்ளது. இந்நிலையில் இவ்வாண்டில் இலங்கை இரு தேர்தல்களை எதிர்கொள்ளவுள்ளது. நாம் நேரிய முறையில் ஊழல் அற்ற ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க முன்வரவேண்டிய அவசியத் தேவையில் உள்ளோம். மக்கள் நாம், மனிதநேயத்துடன் உண்மைக்காகவும், நீதிக்காகவும் உழைத்து நாட்டையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தக்கூடிய அரசியல் தலைவர்களை உருவாக்க ஆவன செய்வோமாக.

### மருதமடு அன்னையின் திருவருகை

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், மருதமடு அன்னையின் திருச்சொரூபமானது எமது மறைமாவட்டத்தின் பங்குகளுக்கு எதிர்வரும் சித்திரை மாதம் எடுத்துவரப்படவுள்ளது. மருதமடு அன்னையின் திருச்சொரூபம் எம் பங்குகளுக்கு வரும் காலம் ஒரு புனித மிகு காலமாகும். அன்னையின் பரிந்துரையும் ஆசீரும் எம் குடும்பங்களில் நிறைவாகக் கிடைக்க ஆன்மீக ரீதியிலே எம்மை நாம் பக்குவப்படுத்துவோம். சிறப்பாக மடுத்திருப்பதிக்குச் சென்று இறையாசீர் பெறமுடியாத வயோதிபர்கள், மாற்று வலுவுள்ளோர்கள், நோயா-ளிகள் மடு அன்னையின் ஆசீர்பெற அவர்களை எமது ஆலயங்களுக்கு அழைத்து வரக் கூடுதல் கவனத்தையும் உதவியையும் வழங்குவோம்.

மடு அன்னையின் திருச்சொரூபம் எம் மறைமாவட்டத்திற்கு எடுத்துவர வாய்ப்பையும் அனுமதியையும் தந்த மன்னார் மறைமாவட்ட ஆயருக்கு எம் நன்றிகள்.

### திருநிலைப்படுத்தல்

எமது மறைமாவட்டக் குருக்களாக இரு அருட்சகோதரர்கள் இவ்வாண்டில் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். அவர்களை உங்கள் செபங்களில் தாங்கிச் செல்லவும்.

### ஆண்டின் செயற்பாடுகள்

இவ்வாண்டில் மறைமாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங் களை, ஆணைக்குழு இயக்குநர்களுடன் இணைந்து வரைந்துள்ளோம். இவ்வாண்டில் எம் செபவாழ்வில் நாம் செழித்து வளரவும் யூபிலி ஆண்டிற்குத் தயாராகவும் பல முயற்சி களை மேற்கொள்ள முடிவுகள் பல செய்துள்ளோம். அவற்றை உங்கள் பங்குத்தந்தை, மறைக்கோட்ட முதல்வர்கள் ஊடாகக் குருமுதல்வர் அவர்கள் நெறிப்படுத்துவார்.

இந்நிகழ்ச்சி நிரல்களுக்கு உங்களுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்கு மாறு வேண்டிக்கொள்கின் றோம்.

உயிர்ப்புப் பெருவிழாவை மகிழ்வுடனும், தகுதியுடனும் கொண்டாட எம் ஆன்மாக்களை இந்நாட்களில் தயார் செய்வோம். உங்கள் குடும்பங்களை இறைவன் என்றும் தம் ஆசீரால் நிரப்புவாராக.

*கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,*

**பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**

## 2024 சாட்டி திருத்தல தவக்கால தியானம் பற்றிய அறிவிப்புக்கள்

சாட்டித் திருத்தலத்தில் தவக்கால சனிக்கிழமைகளில் நடைபெறும் தியானங்களில், மறைக்கோட்டப் பங்குகளை உள்ளிணைப்பது வழக்கம். அந்த வகையில், இந்த வருடத்திற்கான எங்களுடைய திட்டத்தை உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

மறைக் கோட்ட மட்டத்தின் பங்குகள் எதாவது இந்த திட்டத்தில் இணைய விரும்பினால் தயவுசெய்து அவர்களை உடனடியாக எங்களோடு தொடர்புகொள்ளுங்கள். மறைக்கோட்டத்தோடு சில பெரிய பங்குகளையும் தனித்து இணைந்துள்ளோம், பணிகளை இலகுவாக்க. மறைக் கோட்ட மட்டத்தில் இந்த தவக்கால தியானங்களை ஒழுங்கு செய்வதன் நோக்கம் – மறைக் கோட்ட முதல்வர்களுக்கு, யாழ் மறைமாவட்ட ஆயரின் திருத்தலமான, சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தல நிகழ்வுகளை தெரிவிப்பதாகும். கோட்ட ரீதியில் இறைமக்கள் சமூகமளிக்க முடியாவிட்டால், கோட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பங்குகளை தாங்கள் உற்சாகப்படுத்தலாம்.

| கோட்டம் | திகதி | நேரம் |
|---|---|---|
| தீவகம் | 17. 02. 2024 | முதல் சனி 9:00 காலை – 2:00 மாலை |
| யாழ்ப்பாண மறைக்கோட்டம் (பேராலயம், நாவாந்துறை பங்குகள் தவிர்த்து) | 24. 02. 2024 | இரண்டாம் சனி 9:00 காலை – 2:00 மாலை |
| முல்லைத்தீவு - கிளிநொச்சி மறைக்கோட்டங்கள் மற்றும் பேராலய பங்கு | 02. 03. 2023 | மூன்றாம் சனி 9:00 காலை – 2:00 மாலை |
| இளவாலை மறைக்கோட்டம் மற்றும் நாவாந்துறை | 09. 03. 2023 | நான்காம் சனி 9:00 காலை – 2:00 மாலை |
| பருத்தித்துறை மறைக்கோட்டம் | 16. 03. 2023 | ஐந்தாம் சனி 9:00 காலை – 2:00 மாலை |
| பொது | 23. 03. 2023 | ஆறாம் சனி 9:00 காலை – 2:00 மாலை |

உணவு, தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

**மேலதிக தகவல் தொடர்புகளுக்கு:**
செயலாளர்
திருமதி வினோபா றதீஸ்
0770553751:
பொருளாளர்
திருமதி ஜேன் பெவெர்லி நிலோஜன்
077 946 6846

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் நாரந்தனை பங்குத்தந்தை யுமாகிய அருட்தந்தை அஜந்தன் அடிகளாரின் அன்புத் தந்தை **திரு. கபிரியேல் சிந்தாத்திரைதாஸ்** அவர்கள் கடந்த 15.02.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவி னர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## யாழ் மறைமாவட்ட தவக்கால யாத்திரைத்தலம் கல்வாரிப் பூங்கா - வவுனிக்குளம் வழிபாட்டு ஒழுங்குகள்

**17.02.2024 சனிக்கிழமை - பொது**
**காலை 9.00 மணி**
சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம்,திருப்பலி.
**24.02.2024 சனிக்கிழமை - கிளிநொச்சி மறைக்கோட்டம்**
**காலை 8.00 மணி**
சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம்,திருப்பலி.
**02.03.2024 சனிக்கிழமை - இளவாலை மறைக்கோட்டம்**
**காலை 9.00 மணி**
சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம்,திருப்பலி.
**09.03.2024 சனிக்கிழமை - தீவக, பருத்தித்துறை மறைக்கோட்டம்**
**காலை 9.00 மணி**
சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம்,திருப்பலி.
15.03.2024 சனிக்கிழமை - யாழ் மறைக்கோட்டம்
**காலை 9.00 மணி**
சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம்,திருப்பலி.
**23.03.2024 சனிக்கிழமை - முல்லைத்தீவு மறைக்கோட்டம்**
**காலை 9.00 மணி**
சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம்,திருப்பலி.

**ஏ-9 வீதியால் பயணிப்போர் கவனத்திற்கு:**
மாங்குளம் சந்தி - துணுக்காய் வீதி - வன்னிவிளாங்குளம் சந்தி - வவுனிக்குள வீதி - கல்வாரிப்பூங்கா

**ஏ - 32 வீதியால் பயணிப்போர் கவனத்திற்கு:**
வெள்ளாங்குளம் சந்தி - துணுக்காய் வீதி - மல்லாவி வீதி - ஒட்டறுத்தகுளம் சந்தி - வவுனிக்குள வீதி - கல்வாரிப்பூங்கா

**தனிப்பட்ட முறையில் குழுக்களாக வருகைதர விரும்புபவரும் மதிய உணவு ஒழுங்கு செய்ய விரும்புவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்**
**தொலைபேசி இல : 0778503962**

# செபத்தில் வளர்வோமா?

**முன்னுரை**

இந்த ஆண்டை (2024) ஒரு “செப வேண்டுதல்” ஆண்டாக எனது அன்புக்கும் மதிப்புக்கு முரிய போப் பிரான்சிஸ் பிரகடனப்படுத்தியுள்ளார். கேட்டதும் ஓர் எதிர்வினை (reaction) ஏன், வேறேதும் கிடைக்கவில்லையா? இன்று உலகத்திற்கு இதுதான் தேவையா? இவ்வளவுக்கும் அண்மைக்கால வருடங்களாக நான் செபத்தில் சிறிதளவு ஈடுபாடு கொள்ள ஆரம்பித்துள்ளேன். சில வழிகளைத் தேடினேன். தேடிய பாதையில் பயணிக்க ஆரம்பித் தேன். இந்தப் பின்புலத்தில் ஏன் இந்த எதிர்வினை? புரியவில்லை! ஒருவேளை போப் பிரான்சிஸ் அவர்கள் பிரகடனப்படுத்திய கையோடு சில சலசலப்புக்கள் தோன்றின. ஒருவேளை இவைதான் எனது எதிர்வினைக்குக் காரணமாக இருக்கலாம். இயேசு ஓர் உவமை சொன்னார். தந்தை தனது மூத்த மகனைத் தோட்டத்தில் வேலை செய்யப் போகுமாறு கேட்டார். அவன் ‘மாட்டேன்’ என்றான். பின்பு மனம்மாறி (மனம் திருந்தி என்று நான் சொல்லவில்லை) தோட்டம் சென்று வேலை செய்தான். இளையவனோ உடனே செய்வேன் என்றான். ஆனால், செய்யவில்லை. அதிகமான சந்தர்ப்பங்களில் நான் மூத்தவன் போலவே செயற்பட்டுள்ளேன். சில நாட்களின் பின், நானும் மனம்மாறி பொருத்தமான ஒரு தொன்றுதான் இன்றைய உலகிற்கு தேவையான தொன்றுதான்’ என்று முடிவு செய்தேன். எழுத்தென்னும் தோட்டத்திற்கு வேலைக்கு வந்தேன். எனது தேடலின் ஒரு பகுதியை நான் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**பார்த்துப் பழகல்**

நான் சிறுவயதில் எனது தாய், தந்தையர் குடும்ப செபமாலை சொல்லும் பொழுது, அவர்களைப் பார்த்து நானும் சிலுவை அடையாளம் போடுவேன். அவர்களைப் பார்த்து நானும் கைகூப்பி மாதா சிலை- யையும் திரு இதயநாதர் சிலையையும் பார்த்துக் கொஞ்ச நேரம் முழந்தால் போட்டு இருப்பேன். பின்பு அம்மா அப்பாவைப் பார்ப்பேன். அப்பொழுது, அம்மா சிலைகளைக் காட்டி அங்கே பார் என்று கையாலேயே சுட்டிக் காட்டுவார். இதுதான் எனது செபவாழ்வின் தொடக்கம். யேம்ஸ் பவுளர் இக் கட்டத்தைப் பார்த்துப் பழகும் செபம் (Immitative Prayer) என்று தனது நூலில் குறிப்பிட்டார். (Faith Development) பின்னர் கேட்ட செய்தி.

**வாய்ச் செபம்**

அப்பொழுது “பிரியத்த மந்திரம்” என்னும் செபத்தை அம்மா சொல்லித் தந்தார். நானும் மனப் பாடம் செய்து செபித்தேன். அடுத்தபடியாக “பரலோக மந்திரம்” என்ற மந்திரத்தை அம்மா சொல்லித் தந்தார்கள். நானும் மனப்பாடம் செய்து செபித்தேன். நானும் வளர வளர நீண்ட நீண்ட செபங்களை நான் சொல்லிச் செபித்து வளர்ந்தேன். இதையே வாய்ச் செபம் என்று அழைக்கிறார்கள்.

**மகிமைப்படுத்தல்**

கடவுளை மகிமைப்படுத்தும் செபங்களையும், பாடல்களையும் செபிக்கவும், பாடவும் ஆரம்பித்தேன். இந்த மகிமைப்படுத்தும் செபங்கள் பெரும்பாலும் இரவல் வாங்கியே செபித்தேன். அதேவேளை அப்படிப்பட்ட ஒரு வாய்ச் செபத்தில் அதிருப்தி தோன்ற ஆரம்பித்தது. அதிருப்தி வெறுப்பல்ல, சலிப்பல்ல, வேண்டாமென்பதல்ல. அதிருப்தி, ஏதோ ஒரு குறையிருப்பதன் உணர்வு. அர்த்தமில்லாதது போன்ற ஒரு தோற்றம். இந்த அதிருப்தி மனமாற்றத்திற்கு ஒரு வழி. இந்த அதிருப்தி வேண்டியது. இது வளர்ச்சிக்கு வேண்டிய ஒன்று. அதிருப்தியில் நான் மாற்றுவழியைத் தேட ஆரம்பித்தேன்.

இந்தக் கட்டத்தில், தோமஸ் மேரட்டனின் வார்த்தைகள் என்னைச் சிந்திக்க வைத்தன. அவர் எழுதினார்: ஒரு மரம் மரமாக நின்று கடவுளை மகிமைப்படுத்துகின்றது. ஒரு மலர் மலராக இருந்து கடவுளை மகிமைப்படுத்துகின்றது. இவர் என்ன சொல்ல வருகின்றார்? அதாவது ஒரு மரம் தான் வேறொரு மரமாகவோ அன்றேல் ஒரு மலராக- வோ நின்று கடவுளை மகிமைப்படுத்தவில்லை. அதேபோன்று ஒரு மலர் தான் இன்னோர் மலரா- கவோ அன்றேல் காயாகவோ கனியாகவோ நின்று கடவுளை மகிமைப்படுத்தவில்லை. இந்த மலராகவே நின்றுதான் கடவுளை மகிமைப்படுத்துகின்றது. இதையே இன்னமும் விரிவாகச் சொன்னால், ஒரு கோழி, இந்தக் கோழியாகவே நின்று கடவுளை மகிமைப்படுத்துகின்றது. தான் ஒரு மயிலாக மாறி தோகை விரித்து ஆடிக் கடவுளை மகிமைப்படுத்த வேண்டுமென்று ஆசைப்படவில்லை. ஆதங்கம்



சொல்ல முடியுமா? நீங்களும் நானும் குழந்தைத் தனத்தை, குழந்தைக்குரியவற்றை அறவே, முற்றாக விட்டுவிட்டோமா? அல்லது உடலால் அறிவால் வளர்ந்திருந்தாலும் அவ்வப்பொழுது குழந்தைத் தனத்திற்கு குழந்தையின் மனநிலைக்கு பின்னடைவு கொள்ளுகின்றேனா? நீங்கள் அன்பு செய்யும் வகை யைப் பாருங்கள். உங்கள் உறவு- களைப் பாருங்கள். இதென்னய்யா! செபத்தைப் பற்றி எழுதாமல், வேறொங்கோ போறாரே என்று வாசகர் நினைக்கலாம். பொறுமையாகத் தொடர்ந்து படியுங்கள். இக்கட்டுரையின் தலைப்பை மீண்டும் ஒரு முறை படியுங்கள்.

**பவுலின் ஆதங்கம்**

பவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய அதே திருமுகத்தில் தனது ஆதங்கத்தை எழுத்துரைக்கிறார்.

**சகோதர சகோதரிகளே!**

ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல நான் உங்களிடம் பேச முடியவில்லை. மாறாக நீங்கள் ஊனியல்பு கொண்டவர்கள் எனவும், கிறிஸ்துவோடு உறவில் குழந்தைகள் எனவும் எண்ணிப் பேசுகிறேன். நான் உங்களுக்குத் திட

## ஓர் உளவள ஆன்மிகப் பயணத்தில் எனது தேடல்

கொள்ளவில்லை.

ஆனால் மனிதனோ ஒன்றில் தான் வேறொருவனாக அல்லது வேறொருத்தியாக நின்றுதான் கடவுளை மகிமைப்படுத்த முயலுகின்றான், முயலுகிறாள். உண்மையிலேயே அவன் - அவள் சந்நியாசியாக இல்லையென்றாலும் சந்நியாச வேடம் போட்டுக் கடவுளை மகிமைப்படுத்துகின்றான். முகமூடிகள் போட்டுக்கொண்டு கவசங்கள் அணிந்து கொண்டு கடவுளை மகிமைப்படுத்துவது பரிசேயத்தனமானதல்லவா? யாரோ எழுதிய செபங்களையும், யாரோ எழுதிய பாடல்களையும் பயன்படுத்திக் கடவுளை மகிமைப்படுத்தலாமா? இப்படிப்பட்ட செபங்களிலும் பாடல்களிலும் நான் எங்கே?

வளரவில்லையே!

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் சொல்லுகின்றார்: நான் குழந்தையாய் இருந்தபோது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையின் மனநிலையைப் பெற்றிருந்தேன். குழந்தையைப் போல எண்ணினேன். நான் பெரியவனானபோது குழந்தைக்குரியவற்றை அறவே விட்டு விட்டேன். (1கொரி. 13:11). இவ்விடத்தே பவுல் தன்னைப் பற்றியே சொல்வது போல உள்ளது. தனது திருமுகங்களில், பவுல் ஆங்காங்கே தன்னையிட்டு எடுத்துரைத்துள்ளார். இந்தப் பதின்மூன்றாம் அதிகாரத்தில் பவுல் அன்பையிட்டு விரிவாக எழுதுகிறார். அன்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கிறார். இடையே மேற்கூறியதை (மேற்கோள்) ஒரு இடைச் செருகலாகச் செதுக்கியுள்ளார். இந்தக் கூற்று கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

நான் குழந்தையாய் இருந்தபொழுது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையின் மனநிலையைப் பெற்றிருந்தேன். குழந்தையைப் போல் எண்ணினேன். குழந்தையைப் போல அன்பு செய்தேன். குழந்தையைப் போல அன்பை அனுபவித்தேன். ஆனால், நான் பெரியவனானபொழுது, வளர்ந்தவனான பொழுது குழந்தைக்குரியவற்றை அறவே முற்றாக விட்டுவிட்டேன். பின்னடைவு கொள்ளவில்லை. எங்களில் வளர்ந்தோர் பவுல் சொன்னதைப் போல

உணவையல்ல, பாலையே ஊட்டினேன். ஏனெனில், திட உணவை உங்களால் உண்ண முடியவில்லை. இப்பொழுது அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் ஊனியல்புக்கேற்பவே நடக்கிறீர்கள் (1 கொரி 3:1-2).

பவுல் என்ன சொல்ல விளைகிறார்? ஆவிக் குரியவர்கள் அதாவது சிறுபிள்ளைத்தனத்தை முற்றாக விட்டு வளர்ந்தோர் போல் அன்பிலும், ஆன்மீகத்திலும் வளரவில்லை. அதனால் வளர்ந்தவர்களிடம் பேசுவது போல உங்களுடன் பேச என்னால் முடியவில்லை. நீங்கள் குழந்தைத் தனத்தோடு வாழ்கிறீர்கள். அதனால் உங்களுக் குத் திட உணவைத் (solid) தரமுடியவில்லை. அதாவது புட்டு, இடியப்பம், தோசை, சோறு, மரக்கறி, மீன், இறைச்சி போன்ற வகை வகையான திடமான உணவைத் தரமுடியவில்லை. ஏனென்றால் நீங்கள் உடலால் வளர்ந்திருந்தாலும் அறிவால்

**கரவையூர்ச் செல்வம்**

வளர்ந்திருந்தாலும் இன்னமும் பால்புட்டியில் (feeding bottle) தானே பால் குடிக்கிறீர்கள்? இப்படிப்பட்ட உங்களால் திட உணவை உண்ண முடியவில்லை. உண்ண விரும்பவில்லை. ஒரு தேக்கத்தில் தேங்கி பால்புட்டியில் பால் குடிக்கும் பழக்கத்தை உங்களால் விட முடியவில்லை. குழந்தைத்தனத்தில் தரித்து விட்டீர்கள்.


பவுல் உருவகத்தில் பேசுகின்றார். இந்த உருவகப் பேச்சின் பொருளென்ன? குழந்தைத் தனத்தில் நிர்ணயிக்கப்பட்டு விட்டீர்கள். (fixated) இது ஒருவருக்கு ஒரு பெரிய பாதிப்பு. உளவளப் பாதிப்பு. நல்லவேளையாகப் பவுலுக்கு வுறொய்டின் எழுத்துத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் உங்களை, அதாவது அன்றைய கொரிந்திய மக்களை உளவளச் சிகிச்சைக்கு அனுப்பியிருப்பார். பவுல் சொன்னதை இயேசு மறுத்திருப்பாரா?

(தேடல் தொடரும்)

## முதுமையின் முக்கியம்

அறுபது கிலோ எடையையும் ஒரு சிறிய கோல் தாங்கிப்பிடிக்க மேசையில் இருந்த கண்ணாடியை தடவி எடுத்துக்கொண்டு ராமுவை எழுப்பினார் அவன் தாத்தா. ராமு பெற்றோரை சிறுவயதிலேயே இழந்து விட்டான். அவன் உலகம் முழுவதும் அவன் தாத்தா தான். அவனுக்கு தேவையான அனைத்தையும் அவன் தாத்தா நிறைவேற்றிக்கொண்டு வந்தார். காலங்கள் உருண்டோடின. ராமுவும் வளர்ந்து பெரியவனானான். அவன் தாத்தா உடல் நலம் குன்றிக் காணப்பட்டதால் ராமு தாத்தாவிற்கு உதவியாக இருந்தான். துரதிஷ்ட வசமாக ராமுவின் நாட்டை பஞ்சம் கௌவிக்கொண்டது. நாட்டு மக்கள் அனை- வரும் உணவு தேடி அலைந்து திரிந்தனர். சிலர் இறந்தே விட்டனர். இதனை கேள்வியுற்ற அந்த நாட்டு மன்னன் அந்த நாட்டு இளைஞர்களை ஒன்று கூட்டினான். அதில் ராமுவும் தன் இடத்தை நிரப்பியிருந்தான். எல்லோரும் கூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

நாட்டில் உள்ள அனைத்து முதியவர்களையும் நாடு கடத்தினால் நாடு ஓரளவுக்கு பாதுகாக்கப்படும் என்று எண்ணி அனைத்து முதியவர்களையும் நாடு கடத்த அரசன் உத்தரவிட்டான். ஆனால் ராமு அந்த கட்டளைக்கு உடன்படவில்லை. அவன் இரகசியமாக தனது தாத்தாவை வீட்டில் பேணிப் பாதுகாத்தான். ஒரு நாள் வேறு நாட்டு மன்னன் ராமுவின் நாட்டிற்கு உணவு வழங்க ஒரு புதிர் கதையை விடுத்தான். அதற்குரிய விடையை சொன்னால் ராமுவின் நாட்டிற்கு பஞ்சம் தீர்ப்பதற்கான உணவை வழங்குவதாக உறுதி செய்தான். ஆனால் அந்த கேள்விக்குரிய விடை யாருக்கும் தெரியவில்லை. ராமு அதை தன் தாத்தாவிடம் கூறினான். தாத்தா கூறிய அறிவுரைகளின் படி ராமு செயற்பட்டு தனது நாட்டு மக்களுக்கு உணவு வழங்கி பஞ்சத்தை




போக்கினான். தனது தவறை உணர்ந்த அரசன் நாட்டின் வளர்ச் சிக்கு முதியவரின் பங்களிப்பு நிச் சயம் தேவை என உணர்ந்து நாடு நடத்திய முதியவரை மீண்டும் நாட்டிற்கு கொண்டு வந்தான்.

# செபமாலையின் வீரர்கள்

## ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

10

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை



**ஆரம்பகால சாமிநாதர் சபையினர்**

சாமிநாதர்சபையைச்சேர்ந்த கன்னியாஸ்திரி அருளாளர் எமிலியா பிக்கியேரி (1238-1314)(Bl. Emilia Bicchieri) எவ்வளவுக்குச் செப-மாலை மீது பற்றுதலும் பக்தியும் கொண்டிருந்தாரெனில் செபமாலையில் சொல்லிச்செபிக்கப்படும் 15 காரணிக் கங்களின் மகிமைக்காக இவர் ஒவ் வொருநாளும் ஏழைகளுக்கு 15 ரொட்டிகள் வழங்கி வருவார். சாமி நாதர் சபைக்குருவானவரும் புனித சாமிநாதரின் நேரடியான சீடராகவும் விளங்கிய அருளாளர் லீவியா நக ரத்து றோமி (இறப்பு 1261) (Bl. Romee of Livia) என்பவர் 'அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க' என்று கையில் செப-மாலையுடன் செபித்துக்கொண்டிருந்த போது அச்செபமாலைக்கயிற்று முடிச் சுக்குள் அவரது கை சிக்கி நசிந்து போன மையால் ஏற்பட்ட விளைவுகளால் இறந்தார் என்று சொல்லப்படுகின்றது. சாமிநாதர் சபைத்துறவியாகவிருந்த காலம் முழுவதும் இவர் செபமாலை சொல்லிச்செபிப்பதற்கு முடிச்சுக்கள் போட்ட கயிற்றையே பாவித்து வந்த தாகவும் தமது உடன் துறவிகளும் இதுபோலத் தனித்துவமான முறையில் இப்பக்தி முயற்சியைக் கடைப்படிக்க வேண்டுமென அறிவுறுத்துவார்.

செபமாலை இந்த நூற்றாண் டில் எவ்வளவு தூரம் பிரபல்யமடைந் தது என்றால் லண்டன் மாநகரில் ஒரு வீதிக்குப் பரலோகமந்திர வீதி (Pater Noster Row) என்று 12ம் நூற்றாண்டில் பெயரிடப்பட்டிருந்தது. அத்துடன், அதே நகரில் 13ம் நூற்றாண்டில் மரியே வாழ்க ஒழுங்கை (Ave Maria Lane) என்றும் ஒரு ஒழுங் கைக்குப்பெயர் இருந்தது. இந்த வீதியில்தான் செபமாலை செய்யும் கைவினைஞர்கள் இருந்தார்கள்.

சாமிநாதர் சபையினருக்கேயுரித்தான தனித்துவமான துறவற உடையின் ஒரு அங்க மாகச் செபமாலையும் இருப்பதற்குப் பல நூற் றாண்டுகள் எடுத்தன. ஆயினும் விடய மறிந்த சாமிநாதர் சபையில் இருந்த வரலாற் றாசிரியர்கள் துவக்கத்திலிருந்தே செபமாலை யும் உத்தியோகப்பற்றற்ற முறையில் அவர் களது துறவறஉடையின் ஒரு பகுதியாக இருந் திருக்க வாய்ப்புண்டு என அடிக்கடி உறுதிப் படுத்தி வந்துள்ளார்கள். யதார்த்தம் என்ன வெனில் ஆரம்பகால சாமிநாதர் சபைத்துற விகளைச் சித்தரிக்கும் பல ஓவியங்களில் அவர் களது துறவு ஆடையின் ஒரு அங்கமாகச் செப-மாலை இருப்பதை அவதானிக்கலாம். 11ம், 12ம் நூற்றாண்டுகளில் சிலுவைப் போர்களில் ஈடுபட்டிருந்த போரிடும் துறவுநிலை வீரர்கள் பரலோக மந்திர மணிகளை அணிந்திருப்பது அக்கால வழமையென்று எல்லா வரலாற்றா சிரியர்களும் அறிவார்கள். இப்போரிடும் குழுக்கள் பரலோக மந்திர மணிகளை இறைவனுக்காகப் போரிடுவதற்குச் செல்லும் போது ஒருவிதமான ஆன்மீக ஆயுதமாக அணிந்து சென்றனர். அப்போது வழமையான நடைமுறை என்னவெனில் அவர்கள் இச்செப மணிகளை இடுப்புப்பட்டியின் இடப்பக்கத் தில் அணிவார்கள். ஏனெனில் இது கையாள வதற்கு இலகுவாக இருப்பதற்கு ஒரு போர் வீரன் தனது வாளை இடப்புறத்தில்தான் செருகி வைத்திருப்பான். புனித சாமிநாதரும் தமது அணியினர் இதனைப்பின்பற்றித்தமது ஆன்மீக வாளைத்தமது அங்கியின் இடப் பக்கம் அணிந்திருக்க எதிர்பார்த்திருக்கலாம்.

செபமாலையைத்துறவு அங்கியின் ஒரு பக்கத்தில் அணிவது என்பது புனித சா-மிநாதராலோ அல்லது துவக்ககால சாமி நாதர் சபையினராலோ பின்பற்றப்பட்ட நடை முறையா என்பது எங்களுக்கு ஒருவேளை சரியாகத் தெரியாதிருக்கலாம். ஆயினும் ஒரு வியத்தகு உண்மை என்னவென்றால் முயுறே போரில் பிரசன்னமாயிருந்த இன்னொரு புனிதர் இதன் உண்மைத் தன்மையை ஓரளவுக்கு ஒளிரச்செய்கின்றார்.

'புனிதர்களின் வாழ்க்கை' (Acta Sanctorum) எனும் நூலில் உள்ளபடி முயுறே போரின்போது புனித பீற்றர் நொலாஸ்கோ (1189 - 1250) என்று ஒரு புனிதரிருந்தார். புனித சாமிநாதரைப்போன்று புனித பீற்றர் நொலாஸ்கோ 13ம் நூற்றாண்டில் ஒரு துறவற சபையின் நிறுவுனராயிருந்தார். இவர் நிறுவிய துறவற சபையின் பெயர் 'பரிசுத்த கன்னிமரியாளின் இரக்கத்தின் சபை'யாகும். பொதுவாக இவர்களை 'மேர்சிடேரியன்ஸ்' (Mercedarians) என்றும் அழைப்பார்கள். இந்தப்போரிடும் துறவற சபை கைதிகளைப்பிணை செலுத்தி விடுவிப் பதற்கென நிறுவப்பட்டது.

இவர்கள் செபத்தினால் மட்டுமன்றி தேவையேற்படும்போது வாள்கொண்டு போராடியும் கைதிகளை விடுவிப்பார்கள். இச்சபை நிறுவப்பட்டபோது இவர்கள் அணிந்திருந்த துறவற அங்கி அநேக மாக சாமிநாதர் சபையினரது அங் கியை ஒத்திருந்தது. ஆயினும் அதற்கு ஒரு விதிவிலக்கிருந்தது. அது என்னவென்றால் இந்த 'மேர்சி டேரியன்ஸ்'டைய' துறவற அங்கியு டன் உருக்கு இரும்பினாலான ஒரு வாளும் இருந்தது! இரு புனிதர்களும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள். எனவே இவ்விருவரும் பரஸ்பரம் ஒருவர் ஒருவரை அறியாமல் இருந்திருப்பார்கள் என்பதை நம்புவது கடினம். புனித சாமிநாத-ரின் சிலுவைப்படையணியில் 1500 பேரே இருந்தனர். அவர்களுடைய ஆன்மீகப்படையணித்தலைவனாக புனித சாமிநாதரே செயற்பட்டவேளை யில் புனித பீற்றர் நொலாஸ்கோவும், புனித சாமிநாதரும் முயுறே போரில் ஒரே குறிக்கோளுடன் ஒரே எதிரணி-யோடு போரிட்ட ஆயுதந்தாங்கிய இரு சகோதரர்களானபடியால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். புனித பீற்றர் தனது உருக்கு இரும்பு வாளோடு சைமன் டி மொன்போர்ட்டுக்கு அருகாமையில் போர்க்களத்தில் களமாடியபோது, புனித சாமிநாதர் தமது ஆன்மீக வாளாகிய செபமாலை என்னும் ஆயுதத்துடன் செபத்தின் வழியாகப் போராடினார். புனித பீற்றர் தமது வாளை, அங்கியில் ஏந்தியவண்ணம் போரிட்டபோது புனித சாமிநாதர் தமது சபையுடன் அதேபோல செபமா-லையை ஏந்தியவராகப் போரிடத்தூ ண்டப்பட்டாரா? ஆக, அக்காலம் போர் வீரர்களதும், வாள்களதும் காலம். இன்றுவரை சாமிநாதர் சபையினரதும் மேர்சிடேரியன் சபையினரதும் துறவற அங்கிகள் அனேகமாகத் தோற்றத்தில் ஒன்றாகவேயுள்ளன. (ஆயினும் குறிப்பாக இப்போது மேர்சிடேரியன் அங்கி உருக்கு இரும்பு வாளுடன் காட்சியளிப்பதில்லை.

(தொடரும்....)

# அருட்பணி பெஞ்சமின் அல்பிறெட் அ.ம.தி அடிகளாரின் 50வது ஆண்டு நினைவு

## (14. 02. 1974 - 14. 02. 2024 )



**"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும் அக்கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்" ( யோவான் 15 ::16)**

அருட்தந்தை பெஞ்சமின் அல்பிறெட் அ.ம.தி அவர்கள் மிருசுவில் மண்ணில் கண்டெடுக்கப்பட்ட முத்து. இவர் ஆழமான விசுவாசமும், அர்ப்பணமும் பண்பும் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்த தலை மகன். இவரைக் கடவுளே ஒரு துறவற குருவாக அழைத்தார் என்பது தெளிவு. 1915 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி இலங்கையில் யாழ் மறை மாவட்டத்திலுள்ள மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயப் பங்கில் பிறந்தார். இவருடைய தங்கை போர்டோ திருக்குடும்பக் கன்னியர் சபையில் இணைந்து அருட் சகோதரி சென்ற். சாள்ஸ் என்ற பெயரு டன் வாழ்ந்தார் .இவர்கள் இறைபணியில் ஒருவருக் கொருவர் உறுதுணையாகவும், உற்சாகமூட்டியும் மகிழ்ச்சியாகவும் பணியாற்றினர். அருட்தந்தை பெஞ்சமின் அல்பிறெட் தனது ஆரம்பக் கல்வியைக் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் கற்றார். அதனைத் தொடர்ந்து 1931 ஆம் ஆண்டு புனித மாட்டீன் குருக்கள் உருவாக்கல் பயிற்சி நிலையத்தில் கற்று இடை நிலைக் கல்வியைப் புனித பத்திரிசியார் கல்லூரியில் நிறைவு செய்தார். 1935 ஆம் ஆண்டு இறைவனின் குரலுக்குச் செவிசாய்த்து, இறை அழைத்தலுக்கு ஆம் எனப்பணிந்து பம்பலப்பிட்டி அமல மரித்தியாக சபையின் நவசந்நியாசத்தில் சேர்ந்தார். தனது அர்ப்பண வாழ்வின் முதல் வாக்குத்தத்தத்தை 1936 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ந் திகதி நிறைவேற்றினார்.

அதன் பின் றோம் நகருக்குச் சென்று மெய்யியல், இறையியல் பாடங்களைக் கற்றுக்கொண் டார். 2வது மகா யுத்தம் காரணமாக அங்கு அவ ரின் கல்விக்குத் தடங்கல் ஏற்பட்டதனால் ஏனைய அமலமரித்தியாகிகளுடன் இணைந்து அயர்லாந்துக்குச் சென்று அங்கு தன் கல்வியைத் தொடர்ந்தார். அங்கு கடும் குளிர் காரணமாக அதிக சவால்களைக் காண வேண்டியிருந்தது. உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பல பிரச்சினைகள், சவால்களுக்கு முகம் கொடுத்தார். இருப்பினும் தனது தளராத நம்பிக்கையினால் எதுவித குறைகளையும் கூறாது பொறுமையுடன் சகித்துக் கொண்டார். தொடர்ந்து வந்த நோயினால் அவர் மனம் தளரவில்லை. தனது இலக்கை அடைய வேண்டுமென்ற நோக்குடனும், தியாக உணர்வுடனும் தனது நோய்களை மனதார மகிழ்ச்சியுடன் சகித்துக் கொண்டார். தனது இலட்சிய பயணத்தில் திடமாகவிருந்து அயர்லாந்திலுள்ள பில்ரவுண் ( Piltown) என்னுமிடத்தில் 1941 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12ந் திகதி ஓசொறி மாவட்ட கொலியர் ஆயரி-னால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அருட்தந்தையாக வாழ்ந்த காலப்பகுதியில் எந்தவித ஆடம்பரவாழ்வுமின்றி, அமைதியாகவும், புனிதமான, எளிமையான அருட்தந்தைக்குரிய வாழ்வை வாழ்ந்தார். அவர் மக்களின் ஆயனாக, புனிதமான அருட்தந்தையாக வாழ்ந்து மக்களால் மிகவும் கவரப்பட்டு அன்பு வாழ்வினால், பலராலும் விரும்பத்தக்கவரானார். ஒரு சிறந்த கல்வி மானாகத் திகழ்ந்து யாழ் மறைமாவட்டத்திலுள்ள ஊர் காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அதிபராகக் கடமை புரிந்தார். அவரின் திருநிலைப்படுத்தலின் பின்பு முதலாவது நியமனத்தை கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஏற்றுக்கொண்டார். (1945-1948) அதனைத் தொடர்ந்து தான் கற்ற பாடசாலையில் கரவெட்டி திரு இருதயக்கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்றார். (1948-1950) அங்கு இரண்டு வருட சேவையின் பின்பு புனித பத்திரிசியார் கல்லூரியில் இவரின் உதவி தேவையானதால் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். மறுப-டியும் கரவெட்டி திரு இருதயக்கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு 1951-1954 வரை அதிபர் பதவ-ியை ஏற்றுக் கடமையாற்றினார். அதன் பின் ஒரு வருட இடைக்காலத்தில் M.A. பட்டத்தையும் பெற்று, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றினார். கரவெட்டி கரம்பன் போன்ற இடங்களில் பங்குத் தந்தையாகவும் இறைமக்களுக்குப் பணியாற்றினார்.

கடவுளுடைய திட்டத்தை உய்த்துணர்ந்து கொண்டு அருட்தந்தை அல்பிறெட் அடிகள் தோல கட்டி அருட்தந்தை தோமஸ் அடிகளாரின் பண்பில் வாழ்ந்தார். முக்கியமாக ஆழ்தியானம், செப, தப வாழ்வினை விரும்பி அவரைப் போன்று வாழ முயன்றார். அருட்தந்தை அல்பிறெட் அருட்தந்தை தோமஸ் அடிகளாரைப் போன்று ஆழ்தியானத்தினால் கவரப்பட்டு அவரைப் பின்பற்றித் தவஞானியாக வாழ முயன்றரர். இந்த இலட்சியத்திலே நீண்ட நாள் கனவுடன் வாழ்ந்தார். கல்வித் துறையில் நின்று தான் ஓய்வு பெற்ற பின்பு இந்த நோக்கத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்க விரும்பினார். அவருடைய நீண்ட நாள் திட்டங்களுள் செப தவ வாழ்வில் செபமாலைத் தாசர் சபையில் இணைந்து வாழவும் விரும்பினார். தனது இறுதிக் காலத்தில் இவ்வாறுதான் பயணிக்க வேண்டுமென மிகவும் ஆவலுடன் இருந்தார். *(தொடர்ச்சி 11ம் பக்)*

# அன்பின் மகிழ்வு




(அன்பின் மகிழ்வு இல. 2 3 4)

## நம் மறைமாவட்ட மக்களுக்கு மாமன்ற முத்துக்கள்

குடும்பங்களின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட இரண்டு ஆயர் மாமன்றங்களின் அமர்வுகளானது குடும்பங்கள் பற்றிய விரிவுபட்ட பார்வைக்கும் விழிப்புணர்வுக்கும் வழிவகுத்தது. சிறப்பாகத் திருமணம் மற்றும் குடும்பம் தொடர்பாக எழுகின்ற பல்வேறு விதமான சிக்கல்களுக்கு மறைப்படிப்பினை அறநெறி, ஆன்மீகம் மற்றும் மேய்ப்புப்பணி ஆகியன சார்ந்த பல்வேறு கேள்விகளுக்கு திறந்த மனம் கொண்ட ஒரு தொடர் உரையாடலின் தேவையை எடுத்து இயம்புகின்றது. அதாவது திருஅவையானது அந்த அந்த காலங்களில் திருமணம் மற்றும் குடும்பம் என்கின்ற தளங்களில் எழும் சிக்கல்களை சீர்தூக்கி அதற்கமைய வழிகாட்டுதல்களை அளிக்க வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டு இருக்கின்றது. இந்தவகையில் அருட்பணியாளர்கள். இறையியலாளர்கள் போன்றவர்கள் தற்காலத்தில் குடும்பங்கள் சந்திக்கின்ற சவால்கள் மட்டில் வெளிப்படுத்தும் ஆழமான சிந்தனைகள் இறைமக்கள் திருமணம், குடும்பம் என்பவை பற்றிய அதிக தெளிவைப் பெற உதவுகின்றன. திருச்சபையில் திருமணம். குடும்பம் ஆகியவை பற்றிய திருஅவையின் படிப்பினைகளில் ஒருமைப்பாடு நிச்சயம் தேவை என்றாலும் தூய ஆவியார் நம்மை முழு உண்மையை நோக்கி வழி நடத்துவதால் ஒவ்வொரு நாடும் தலத்திருச்சபையும் தத்தம் மரபுகளுக்கும் இடத்துக்கும் ஏற்ப அதிக பொருத்தமான தீர்வுகளைத் தேடிக் கொள்ளலாம் என்பதை இத்திருத்தூது ஊக்கவுரையில் திருத்தந்தை வலியுறுத்துகின்றார்.

ஆர்வத்துடன் செவிமடுத்த திருத்தந்தை இந்த இரண்டு ஆயர்கள் மாமன்றங்களிலும் பங்கு பற்றிய திருத்தந்தை இந்த மாமன்ற வழிமுறையானது இந்த இரண்டு ஆயர்மாமன்றங்களில் பங்கு பற்றிய அனைத்து ஆயர்களும் தெரிவித்த கருத்துக்கள் மூலம் உலகம் முழுவதும் குடும்பங்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளைத் தான் புரிந்து கொள்ளத் துணை செய்வதாகக் குறிப்பிடும் திருத்தந்தை அவ்வாறு பங்களிப்புச் செய்த அனைத்து ஆயர்களுக்கும் நன்றி கூறுவதாகவும் இத்திருத்தூது ஊக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக இம் மாமன்றத்தில் பங்கு பற்றிய மாமன்றத் தந்தையர்களின் அக்கறைமிக்க நேர்மறைக் கேள்விகள் குறுக்கீடுகளை திருத்தந்தை அவர்கள் மிக மிக உன்னிப்பாகச் செவிமடுத்தார். இந்த வகையில் இந்த மாமன்றங்களைத் தொடர்ந்து இந்த மாமன்றம் திருமணம், குடும்பம் பற்றிய சிந்தனைகள் உலகம் முழுவதும் வாழுகின்ற அனைவருக்கும், அவர்களின் சிந்தனைக்கும், உரையாட லுக்கும், அருட்பணி செயற்பாட்டிற்கும் இன்னும் சிறப்பாக அனைத்துக் குடும்பங்களின் சவால்களில் உதவுவதற்காகவும் ஊக்கம் கொடுப்பதற்காகவும் இத் திருத்தூது மடலை எழுதுவதாகத் திருத்தந்தை அன்புடன் குறிப்பிடுகின்றார்.

இந்த முத்துக்கள் அடித்தள மக்களுக்கு இத் திருத்தூது ஊக்கவுரையானது இரண்டு மாமன்றங்களில் மலர்ந்த முத்துக்களின் பொக்கிஷம் ஆகும். இவ்வாறான சிந்தனை முத்துக்கள் அடித்தள மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டியது அந்த அந்த தலத் திருச்சபைகளுடைய பொறுப்பாகும். அந்த வகையில் யாழ் மறைமாவட்டத்தின் குடும்ப நல மையம் யாழ் ஆயரின் வழிகாட்டலின் கீழ் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் குடும்பங்கள் பற்றிய திருத்தூது ஊக்கவுரையில் வெளிவந்துள்ள பாரிய சிந்தனைகளை நம் மறைமாவட்டப் பத்திரிகையாகிய காவலனில் தொடர்ந்து அளிக்க விரும்புகின்றது. இதற்கு களம் அமைத்து கொடுக்கின்ற பாதுகாவலன் ஆசிரியருக்கும் அவரது குழுவுக்கும் எமது நன்றிகள். தம்பதிகளின் சிந்தனைக்கு: தம்பதிகள் தங்களையே மதிக்கப்பழக வேண்டும் கணவன் மனைவி தங்களை தாங்களே மதிக்கப் பழக வேண்டும்.

60வது திருமண வாழ்வை நிறைவு செய்த தம்பதிகள் இதனை ஓர் ஆன்மீக நறுமணம் கலந்த கொண்டாட்டமாகப் பிள்ளைகளோடு கொண்டாடினார்கள். இந்த வேளையில் ஒருவர் அந்தக் கணவரிடம் உங்களுடைய இந்த அழகான திருமண உறவானது ஒரு பெரும் சுவாலையாக இது வரை காலமும் எரிய வைத்தது எது? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு கணவன் சொன்ன அழகான பதில்: "அவள் எப்போதும் எனது கண்களுக்கு மனதளவிலும் உடலழவிலும் எனக்கு அழகாகவே இருக்கின்றாள். அப்படி இருக்கையில் நான் ஏன் இன்னொரு உறவை நினைக்க வேண்டும். உண்மையில் இந்த மனைவி சுமாரான அழகு உடையவள், சற்று நிறைகூடியவள், முகத்தில் பல சுருக்கங்கள், காலத் தின் ஒட்டத்தின் காரணமாகச் சற்றுப் பழுதடைந்த பற்கள். இவ்வாறாக அவளுடைய தோற்றம் இருந்த போதிலும் அவள் எப்போதும் அழகான ஆடையை உடுத்தி இருப்பாள், எப்போதும் மகிழ்வோடு இருப்பாள், எப்போதும் அழகாகத் தன்னை அலங்கரித்து வைத்து இருப்பாள். மொத்தத்தில் என் மனைவி உண்மையில் தன்னையே மதிக்கிறாள் எனவே தன்னையே அழகாக வைத்திருக்கின்றாள். இதனால் தான் அவள் என்றுமே எனக்கு அழகானவள் தான். எனக்கு அவளின் அன்பும் உறவுமே போதும்.

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை

**மணமகன் தேவை**

வயது : 31
தொழில் : ஆசிரியர்
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித் தகைமை: NDT , BBM (Degree)
உதவி அரசாங்க அதிபர் பிரிவு: சண்டிலிப்பாய்
வாழ்க்கைத்துணை பற்றிய எதர்பார்ப்பு:
அரசாங்கம் அல்லது
தனியார் துறையில் வேலை செய்பவர்
விரும்பத்தக்கது.
உள்நாடு மிகவும் விரும்பத்தக்கது.

**மணமகள் தேவை**

வயது : 41
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
தொழில் : அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச வேலை)
கல்வித்தகைமை: B.A , M.A (Reading)
உதவி அரசாங்க பிரிவு: யாழ்ப்பாணம்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
வேலையுள்ள, வேலையற்ற அல்லது
வெளிநாட்டிலுள்ள பெண்

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

**அன்னை திரேசாவின் பொன் மொழிகள்**

**தூரத்தில் இருப்பவர்களை அன்பு செய்வது இலகு ஆனால் எங்களுக்கு மிக அருகில் இருப்பவர்களை அன்பு செய்வது மிகக் கடினம். எனவே என்றும் அன்பை உங்களுடைய குடும்பத்திற்குக் கொண்டு வாருங்கள் ஏனெனில் அங்கே தான் ஒருவர் மற்றவரை அன்பு செய்கின்ற அன்புப் பயணம் ஆரம்பிக்கின்றது.**




பேர்டன் றசல் என்ற சமூகவாதி இறைவனை வழிபடுவதற்குப் பயம் முக்கிய காரணி என்கிறார். அறிய முடியாதவரின் பயங்களும் தனக்கு உதவியாக ஒரு மூத்த சகோதரன் இருக்கிறார் அவர் அனைத்துப் பிரச்சனைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் தீர்வு கொடுப்பார் என்ற எண்ணம். ஓர் அறிய முடியாத பரம்பொருளின் பயம். தோல்வியின் பயம். இறப்பின் பயம்.

இக்கருத்தியலில் உண்மைத் தன்மை இல்லாவிடினும் இதை முழுமையாக மறுக்க முடியாது. விவிலிய பின்புலம் அனைத்து மறைகளுக்கான இறை நம்பிக்கையின் மூல வேராக அமைகிறது. ஆபிரகாமிற்கு ஒரே மகனை கொடுத்திருந்தும் வாக்குறுதிக்கு முரண்பாடாய் இருந்தும் அதை காணிக்கையாக்கத் துணிந்தார் ஆபிரகாமின் தீவிர அன்பை இது வெளிப்படுத்துகிறது. (தொநூா. 17:5) யோபு சகிக்க முடியாத துன்பியலை தம் வாழ்வில் தாங்கியது அவரது சகிப்பில் மலர்ந்த இறைபற்றுறுதி. தாவீது சவுலுடனான முரண்மை வெளியில் இறைவனைத் தனது நல்ல ஆயன் என்று அபார இறையன்பால் உயிர் பெற்றதும்: இவர்கள் அனைவருக்கும் பயம் உந்த லாக இருக்கவில்லை என்பது மிகத் தெளிவு.

### அன்பில் முதிர்ந்த தானியலின் இறைப்பற்றுறுதி

தானியல் தனது இரு யூதத் தோழர்களையும் அரசன் நெபெக் குடோசனர் தான் சார்ந்த தெய்வங்களை வழிபடப் பணித்தான். வழிபட மறுத்ததால் நெருப்புச் சூழையில் எறியப்படுவார்கள் என்று கடும் தொனியில் பகர்ந்தான். அதற்கு அவர்கள் தங்களை இறைவன் விடுவிப்பான் என்ற எண்ணம் இருப்பினும் அது நடக்காவிட்டாலும் இறைவனில் வைத்திருக்கும் தங்களது அபார அன்பினால் தங்களை அர்ப்பணிக்கத் தயாராகிறார்கள். 'அவரே எங்களை உம் கையில் என்றும் விடுவிப்பார். அப்படியே அவருக்கு மனம் இல்லாமல் போனாலும் அரசரே நாம் உம்முடைய தெய்வங்களை வழிபட மாட்டோம். நீர் நிறுவிய பொற்சிலையை நாங்கள் தொழப்போவதில்லை. இது உமக்குத் தெரிந்திருக்கட்டும் என்றார்கள்' (தானி. 3:18) இவ் எடுத்துரைப்பு, அல்லது அறிவுறுத்தல் வேதாகம வாக்கியங்களில் மிகமுத்தானது. அதாவது தானியலை இறைவன் தீயில் நின்று காப்பாற்றினாலும், காப்பாற்ற விட்டாலும் இறைவன் தங்களைத் தப்புவதற்கு வழி சமைத்தாலும், செய்யாவிட்டாலும் அவர்களது இறையன்பு ஆழமானது. அவர்களின் அபார அன்பு ஒரு வெகுமதியை எதிர்பார்க்கவில்லை. இக்கருத்து தோல்வியின் வெளிப்பாடாக இருப்பினும் அவர்களின் ஆழமான இறைப்பற்றை சுட்டுகிறது. அற்புதத்தில் அவர்களது நம்பிக்கை சார்ந்து இருக்கவில்லை. (யோபு 1:9,13:15.) இறைவனில் கொண்ட அன்பு இறப்பில் எழுந்த பயத்தை மிஞ்சி நிற்பது நோக்கற்பாலது.

### கிறிஸ்துவின் அழுகைக் குரல்

மாற்கு நற்செய்தி 'என் பிதாவே என் பிதாவே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்' (மாற்.15-34) என்ற அழுகுரல்: இது எதிர்நோக்கை இழந்த குரலாக, ஒரு முரண்பாடு உள்ளதாகக் கவனிக்கப்படுகிறது. மனிதத் தன்மையின் தோல்வியின் கொடூரத்தையும் சிலுவையின் அவலச் சாவையும் உணர்ந்து திருப்பாடலின் முதல் வரிகள் கூறினாலும், (திபா 22:1)அப்பாடலின் முழுமையானதை உணர்ந்து இருந்தார். இறுதியில் 'நீ என்னைக் காப்பாற்றுவாய் என்று தெரிந்து இறைவனின் முழுமையான நம்பிக்கையை இழக்கவில்லை. 'இயேசு நானும் தந்தையும் ஒன்று' (யோவா. 10-30) என்பதை உணர்ந்திருக்கலாம்.

### அற்புத அடையாளங்களைத் தேடும் மனிதர்

மக்கள் அநேகமாகத் தமது இறை நம்பிக்கையை உறுதிப்படுத்த அற்புத அடையாளங்களை எதிர்பார்க்கிறார்கள். அத்துடன் தாம் இறைவனில் அன்பு வைத்திருக்கிறோம் என்றும் உறுதிப்படுத்துகிறார்கள். இதைத் தான் சிலுவை அடியில் நின்ற யூதரும், வீரர்களும் எதிர்பார்த்தார்கள். தமது வார்த்தைகளுக்கும் துர் அதிஷ்டங்களுக்கும் உடனடித்தீர்வு இறைவன் வழங்குவார் என்று எண்ணுகிறார்கள். துன்பியல் அனுபவத்தில் முதிர்ந்த ஆதித் திருஅவை சாவின் பிடியிலும் உயிரை அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார்கள். நேர்மைசார் அன்புப் பற்றுதியன்றி வேறொன்றும் நம்பிக்கையை உறுதிப்படுத்தாது.

**பவுல் அடிகளார் கூற்று:** 'யார் தான் கிறிஸ்துவின் அன்பில் இருந்து எம்மைப் பிடிக்க முடியும்' தொடக்கத் திரு அவையினரின் மறைசார் உயிர் சாட்சிகளின் ஆழமான நம்பிக்கைக்குத் தானியலின் வாழ்வு ஒரு முன் நிழலாக இருந்திருக்கலாம். பவுல் அடிகளாரின் கூற்று: 'நாம் நம்பிக்கை இழந்தாலும் இயேசு பெருமான் எம்மில் நம்பிக்கை வைத்திருக்கிறார்' (2திமொ. 2:13)





# உறவுகளைச் சீர்செய்வதன் வழியாய் உடல் நலனைச் சீர்செய்வோம்



## உலக நோயாளர் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி

ஒரு ஞானமிக்க மருத்துவர் சொன்னார், **“மனிதனுக்கு அவசியமான ஆகச்சிறந்த மருந்து அன்பு.”**

சிலர் கேட்டார்கள், “ஒருவேளை அது வேலை செய்யவில்லையென்றால்?” சிரித்துக்கொண்டே அந்த மருத்துவர் சொன்னார், “அளவைக் கூட்டுங்கள்” என்று.

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 1991-ஆம் ஆண்டு நடுக்கவாத நோயால் (Parkinson) பாதிக்கப்பட்டார். அந்த நோய் அவரிடம் கண்டறியப்பட்ட ஓராண்டு கழித்தே அவர் உலக நோயாளர்கள் தினத்தை ஏற்படுத்தினார். 1993, பெப்ரவரி 11-ஆம் திகதி முதல் முறையாக உலக நோயாளர்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

லூர்து அன்னையைத் தேடி வருகிற எண்ணற்ற பக்தர்கள் அன்னையின் பரிந்துரையால் அவளது திருத்தலத்தில் நலமடைந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, லூர்து அன்னையின் திருவிழா நினைவாக ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 11ஆம் திகதி இந்தத் தினத்தைக் கொண்டாடத் திருத்தந்தை ஆணை பிறப்பித்தார். மேலும், இதே நாளில் தான் 2013-ஆம் ஆண்டு திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட், தனது உடல்நலக் குறைவைக் காரணம் காட்டித் தனது திருத்தந்தை பொறுப்பைத் துறந்தார்.

ஆண்டுக்கு ஒருமுறை அனுசரிக்கப்படுகிற இந்த உலக நோயாளர்கள் தினம், நோயாளிகள், அதிலும் குறிப்பாக, நாள்பட்ட மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிற நோயாளிகளுக்கு முறையான பராமரிப்புக் கொடுக்கப்பட வேண்டியதைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த நாள் நோயாளர்களுக்காகச் செபிக்கவும், அவர்களைப் பராமரிக்கிறவர்களைக் கௌரவப்படுத்தவும், மேலும், துன்புறுதல் குறித்த ஆன்மீகத்தைக் குறித்துத் தியானிக்கவும் நமக்கு வழங்கப் பட்டிருக்கின்றது.

சவால்களைச் சந்திக்கிறபோது தளராது இருப்பதற்கும், அமைதியாக அதை எதிர்கொள்வதற்கும் அடிப்படையாக இருக்கும் விசுவாசத்தின் பங்கை எடுத்துக்காட்டுவதே இந்நாளின் நோக்கமாகும். நோயுறும் தறுவாயில் நம்மில் புரிதலையும், ஒற்றுமையையும் வளர்க்கும் விதமாக இந்த நாள் உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றது. கிறிஸ்தவ நிறுவனங்கள் நோயாளர்களுக்கு மருந்துகள், உணவுகள், ஆன்மீக வழிகாட்டுதல்களைக் கொடுப்பதன் வழியாக இந்நாளைச் சிறப்பிக்கின்றனர்.

இவ்வாண்டில் உலக நோயாளர்கள் தினத்தின் 32-வது ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்கின்றோம். ‘மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று-உறவு-களைச் சீர் செய்வதன் வழியாய் உடல்நலத்தைச் சீர் செய்வோம்’ என்பது இவ்வாண்டு பெப்ரவரி 11-ஆம் திகதி கொண்டாடப்பட்ட உலக நோயாளர்கள் தினத்திற்கான திருத்தந்தையினுடைய செய்தியின் தலைப்பாகும். தொற்றுநோய்களும், தொடர்ந்து நடக்கும் பிரச்சினைகளும் தனிமைப்படுத்துதல், தனிமை ஆகிய உணர்வுகளை அதிகப்படுத்தியிருப்பது திண்ணம்.

ஆனால் அமைதியும், வளமையும் நிறைந்த சமூகங்களில் கூட மனிதர்கள் நோய், முதுமை மற்றும் இதர பாதிப்புகளின் விளைவாகக் கைவிடப்படுதல், தனிமை ஆகிய உணர்வுகளை அனுபவிப்பதைத் திருத்தந்தை எடுத்துக்காட்டுகின்றார். இது அவர்களுக்கான உறுதியான சமூகப் பாதுகாப்புத்தளங்களையும், ஆதரவு அமைப்புகளையும் உருவாக்குவதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

நம் சமூகங்களில் தனிமனித மேலாதிக்கத்தையும், உற்பத்தித் திறனையும் முன்னிறுத்துகிற மனப்பாங்கு முதியோர், நோயாளிகள், ஊனமுற்றோர் ஆகியோரைப் பயனற்றவர்களாகவும், சமூகத்தின் சுமைகளாகவும் கருதும் மனநிலைக்கு வழியாக அமைகின்றது. இந்தத் ‘தூக்கிப்போடுகிற’ மனநிலை அடிப்படை உரிமைகளான சுகாதாரம், மனித மாண்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குறைக்கின்றது.

கலாசாரம் தனிமனிதனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறபோது, எதைப் பற்றியும் கவலைப்படாது, உற்பத்தியை மட்டும் உயர்த்திப் பிடிக்கும் ஒரு போக்கு மற்றும் செயல்திறன் மட்டுமே என்ற ஒரு மாயக்கட்டமைப்பு ஆகியவை உருவாக வழியாக அமையும். இத்தகைய போக்கு, தனிமனிதர்களின் செயற்பாடுகள் குறைகிற போது இரக்கமின்மையையும், புறக்கணிப்பையும் அவர்கள்மீது திணிப்பது உறுதி என்று திருத்தந்தை கூறுகின்றார்.

நாட்டுத் தலைவர்கள் சுகாதார உரிமைகளைக் குறைத்து மதிப்பிடுவது குறித்த தனது கவலைகளை வெளிப்படுத்தியிருப்பது இக்காலத்திற்கு ஏற்ற தேவையான ஒன்றாகும். இப்படிச் சுகாதாரத்தை, வழங்கப்படுகின்ற சேவைகளில் ஒன்றாகக் குறைத்துப் பார்ப்பது மனிதாபிமானத்திற்குப் பாதிப்பையும், பராமரிப்பின் தரத்தைக் குறைக்கவும் வகை செய்யும். கடவுள் ஆதாமைப் படைத்ததையும், தோழமையின் அவசியத்தையும் மையப்படுத்துவதன் வழியாக உறவுகளோடு ஒன்றித்து வாழ்வது என்பது நமக்கு இயற்கையாக அமையப்பெற்ற இயல்புகளில் ஒன்றாகும் என்பதைத் திருத்தந்தை எடுத்துக்காட்டுகின்றார். தனிமனிதத் தன்னிறைவு என்பது உறவுகளின் ஒன்றிப்பால்தான் நிகழ்கின்றது. அர்த்தமுள்ள உறவுகள், நட்பு, காதல் ஆகியவை தனிமனிதத் தன்னிறைவிற்கு அவசியப்படுகின்றது என்ற தனது வாதத்தை, மூவொரு கடவுளின் பிணைப்பைக் குறித்த தனது சிந்தனையின் வழியாய் திருத்தந்தை நிறுவுகின்றார்.

சவால்மிக்க தருணங்களில் கூட நிலைத்திருப்பதன் வழியாய் உறவுகள் துன்ப நேரங்களில் வலிமையையும், ஆதரவையும் தருகிற ஆதாரமாகத் திகழ்கின்றன. எனவே, ஒருவருக்கொருவர் கொண்டிருக்கிற மதிப்பு மற்றும் நோயாளிகள், குடும்பத்தினர், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் உருவான ஒரு நலமளிக்கும் உடன்படிக்கை முறையான மற்றும் முழுமையான பராமரிப்பிற்கு முக்கியம் எனத் திருத்தந்தை அறிவுறுத்துகின்றார்.

நல்ல சமாரியனுடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றி நோயுற்றோர் மீது அன்பையும், கனிவையும் பொழிய வலியுறுத்துகின்றார்.

இங்கு பராமரிப்பு என்பது அவர்களின் உடல்சார் நலனுக்காக மட்டுமல்ல. மாறாக, கடவுள், குடும்பம், நண்பர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரோடு அவர்கள் கொண்டிருக்கிற உறவுகளின் நலனுக்குமானது. நெருக்கம், அன்பு, நட்பு ஆகியவை தான் நோயாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முதல் சிகிச்சை ஆகும்.

அன்புறவால் பிறந்திருக்கிற நாம் அன்பு செய்ய படைக்கப்பட்டிருக்கின்றோம். ஒன்றிப்பையும், இணைந்திருப்பதையும் இலக்காய் கொண்டிருக்கின்றோம். நோயாளிகளுக்கான பூரண நலம் என்பது மருந்துகளால் மட்டும் கிடைக்கிற ஒன்றல்ல. மாறாக, அது அன்பான ஒரு பகிர்கிற சமூகத்தாலே சாத்தியப்படுகின்றது என்பதைத் திருத்தந்தை அறிவிக்கின்றார். ‘நீங்கள் எப்போதும் ஒரு சுமை இல்லை’ என்பதை எடுத்துரைத்து உங்களின் பராமரிப்பிற்கான, பாசத்திற்கான தேவையை ஒருபோதும் மறைக்காதீர்கள் என்று திருத்தந்தை நோயுற்றோரை வலியுறுத்துகின்றார். தனிமைப்படுத்துதல் என்ற தொற்றுநோயை எதிர்க்க, நம் ஆண்டவர் இயேசுவினுடைய கனிவுள்ள பார்வையைக் கைக்கொள்ள அவர் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் ஓர் அழைப்பைக் கொடுக்கின்றார்.

திருத்தந்தையைப் பொறுத்தவரையில் துன்புறுவோரும், புறக்கணிக்கப்பட்டோரும் விளிம்பு நிலையில் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர்கள் திரு அவை மற்றும் மனிதத்தின் மையத்தில் கனிவுடன் கூடிய நம் கவனத்திற்காகக் காத்திருக்கின்றார்கள். தனிமனிதப் போக்கு, அலட்சியப் போக்கு, பயனின்மை ஆகியவற்றை மையப்படுத்துகிற கலாசாரத்திற்கு எதிராகக் கரிசனையும், அன்பும் மிக்க கலாசாரத்தை உருவாக்க நாம் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

திருத்தந்தை பிரான்சிஸ் தனது ஒட்டுமொத்தச் செய்தியின் சுருக்கத்தைப் பின்வரும் வார்த்தைகளில் அழகுற எடுத்துரைக்கின்றார்: நோயாளிகள், பாதிக்கப்பட்டோர், ஏழைகள் ஆகியோர் திரு அவையின் மையமாக, இதயமாக இருக்கின்றார்கள். அவர்கள் நமது மனிதநேயம் மற்றும் மேய்ப்புப் பணியின் மையமாக, இதயமாகத் திகழ வேண்டும். நமது செபங்கள் குறிப்பாக, நற்கருணை வழியாகக் கிறிஸ்து நம்மீது பொழிகிற பிறரன்பால் தனிமைப் படுத்துதல் மற்றும் தனிமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருக்கிற நோயாளிகளின் காயங்களைக் குணமாக்க அனைத்துக் கத்தோலிக்கர்களுக்கும் திருத்தந்தை தெளிவான அழைப்பைக் கொடுக்கின்றார்.

**அருள் முனைவர்**
**மெர்லின் ரஞ்சித் அம்புரோஸ்**

## பாதுகாவலன் மறை அறிவுப் போட்டி - 2024

பாதுகாவலன் பத்திரிகையில் பாதுகாவலன் மறை அறிவுப் போட்டியொன்றை இவ்வாண்டில் ஆரம்பிக்கின்றோம். இப்பகுதியில் கத்தோலிக்க மறை அறிவை மேம்படுத்தும் நோக்கோடு திரு அவையின் படிப்பினைகள், சூழமைவியல், இறையியல் சிந்தனைகள் மற்றும் வத்திக்கான், உலகத் தலத் திருஅவை, கத்தோலிக்க செய்திகளை மையப்படுத்தி இவ்வினாவிடைப் பகுதி அமைகின்றது.

ஒவ்வொரு மாதமும் ஆரம்பத்தில் வெளிவரும் பாதுகாவலன் பத்திரிகையில் முன்னைய வினாக்களுக்கான விடைகள் வெளியிடப்படும். தெரிவு செய்யப்படும் முதன்மை வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் உயிர்ப்புப் பெருவிழாவின் போதும், கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் போதும் வழங்கப்படும்.

பத்திரிகை வெளியீட்டுத் திகதியிலிருந்து 20 நாட்களுக்குள் விடைகளைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**“ பாதுகாவலன் மறை அறிவுப்போட்டி - 2024”**
**360, புனித வளன் கத்தோலிக்க அச்சகம்**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்**
**- ஆசிரியர்**

41. அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட முதலாவது ஆர்ஜென்ரீனா நாட்டுப் பெண் புனிதர் யார்?
42. யாழ் மறை மாவட்டத்தில் பணியாற்றும் நான்கு துறவற சபைகள் தருக?
43. தொழிலாளர் சாசனம் என அழைக்கப்படும் ‘நேரும் நோவாறும்’ என்னும் திருமடலை எழுதிய திருத்தந்தை யார்?
44. ஒல்லாந்தர் காலத்தில் யாழ் கோட்டையில் வேதசாட்சியாகக் கொல்லப்பட்ட ஒருவரின் பெயரைத் தருக?
45. புனித யோசவ்வாஸ் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாகப் பணியாற்றிய கிராமம் எது?
46. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் நடத்தப்பட்ட காலம் என்ன?
47. வடக்குக் கிழக்கு ஆயர் மன்றில் உள்ளடங்கும் மறை மாவட்டங்கள் எவை?
48. மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயர் யார்?
49. வேதாகமத்தில் வெளிப்பாட்டு நூல்கள் எவை?
50. எசாயா இறைவாக்கினர் பிறந்த ஊர் எது?
51. அழியாத முத்திரையைப் பதிக்கும் அருட்சாதனங்கள் எவை?
52. ஒரு சந்தி கடைப்பிடிக்கப்படவேண்டிய நாட்கள் எவை?
53. நாம் கடைப்பிடிக்கும் தவக்காலம் போன்ற மனமாற்றத்தின் காலத்தைக் கடைப்பிடிக்கும் ஏனைய மதங்கள் இரண்டு தருக?
54. இவ்வருடம் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சர்வதேச கிறிஸ்தவ ஆய்வு மாநாட்டை கிறிஸ்தவ கற்கைகள் துறையுடன் இணைந்து நடாத்திய அமைப்பு எது?
55. இந்திய கத்தோலிக்கர்கள் அதிகமாக எமது மக்களோடு இணைந்து கொண்டாடும் யாத்திரைத்தல விழா எது?
56. அமல மரித்தியாகிகள் துறவற சபையின் ஸ்தாபகர் யார்?
57. ‘ஊறனியம்’ என்ற சஞ்சிகையின் தொகுப்பாசிரியர் யார்?
58. செபமாலைத் தாசர் சபையின் ஸ்தாபகர் இறையடியார் தோமஸ் அவர்களின் பூர்வீகக் கிராமம் எது?
59. லூர்து பதியில் தேவதாய் பெர்னடேத்துக்கு எத்தனை முறை காட்சிகொடுத்தார்?
60. லூர்து பதி அமைந்துள்ள நாடு எது?
61. கூட்டொருங்கியக்கம் என்பதன் பொருளை சுருக்கமாகத் தருக?
62. ‘எப்பத்தா’ என்பதன் பொருள் என்ன? இன்றும் எச்சடங்கில் இவ்வார்த்தையை நாம் பயன்படுத்துகின்றோம்?
63. திருப்பாடுகளின் காட்சியை வருடா வருடம் அரங்கேற்றும் நிறுவனம் எது?
64. யாழ் மறைமாவட்ட குடும்ப வளத்துணை நிலையம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
65. தொடக்க நூலில் உள்ளடங்கியுள்ள மரபுகள் இரண்டு தருக?

**தொகுப்பு: அருட்பணி. தே.யூட்தாஸ்**




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(மேரி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: வழிபாடுகளில் மட்டும் பங்கெடுத்தால் தங்களின் ஆன்மீக வாழ்க்கை நிறைவுக்கு வந்து விடும் எனச் சிலர் நம்புகின்றார்கள். இதுபற்றி உங்கள் கருத்தென்ன?**

**ப:** மேரி, 'வாழ்விலிருந்து புறப்படாத வழிபாடும், வாழ்விற்கு இட்டுச்செல்லாத வழிபாடும் அர்த்த மற்றவை, அவசியமற்றவை' என்றொரு கூற்றினை எங்கோ படித்த நினைவிருக்கின்றது. இது உண்மை. காரணம், வாழ்வைத் தொடாத வழிபாடும், வழி பாட்டுக்குத் தொடர்பில்லாத வாழ்வும் பயனற்றதே என அடித்துச் சொல்லலாம். எனவே வெறுமனே வழிபாட்டுச் சடங்குகள் மட்டும் ஆன்மீக வாழ்வுக்குப் பொருள் சேர்க்காது. உதாரணமாக நோன்பிருத்தல் என்ற வெறும் செயலைக் கடைபிடிப்பதால் மட்டும் - அதாவது பசியுற்றிருத்தலால் மட்டும் - நோன்பிருத்தலால் கிடைக்கும் பேற்றினைப் பெறமுடியாது. நோன்பை எதற்காக இருக்கின்றோம் என்ற கேள்விக்கான விடை, நோன்பிருத்தல் என்ற செயலை பொருளுள்ளதாக்கும். அதனால்தான் 2024ம் ஆண்டுக்கான தபசுகாலச் சிந்தனைக்காகவும் செயற்பாட்டிற்காகவும் திருத்தந்தை பிரான்சிஸ், உறவினர்களுடன் - அயலவர்களுடன் பேசாமல், தம் மனைவியரைத் துன்புறுத்தி, தம் சொந்தப் பெற்றோரைச் சந்திக்காமல் அவர்களின் தேவைகளைப் பொருட்படுத்தாமல், தேவையில் உள்ளோருடன் பகிராமல் நோன்பிருத்தலால் என்ன பயன் விளையப்போகின்றது எனக் கேள்வி எழுப்புகின்றார். மேலும், தபசு காலத்தில் ஒரு துண்டு மாமிசத்தைத் தவிர்ப்பதனால் ஒருவர் நல்லவராகவும் ஒரு துண்டு மீனைத் தவிர்ப்பதனால் புனிதராகவும் ஆகப்போவதில்லை எனக்குறிப்பிடுவது நம் நோன்பிருத்தல் என்ற சிந்தனையைத் தூண்டியெழுப்பி, அவ்வறச் செயலைப் பொருளுள்ளதாக்க வேண்டும் என்ற அழைப்பை விடுக்கின்றார் திருத்தந்தை பிரான்சிஸ். புரிகின்றதா மேரி?

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**கேள்வி: சிறுசிறு விடயங்களை எல்லாம் தூக்கிப்பிடித்துப் பெரிதாக்கி சமூகங்களுக்கிடையில், சமயங்களுக்கிடையில் பிரிவினைச் சிந்தனைகளை விதைப்பவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** மல்லிகா, 'படிக்காத மேதை' என்றொரு பழைய சினிமாப் படம் வெளிவந்ததைக் கேள்விப் பட்டிருப்பீர்கள் அல்லது நீங்களே பார்த்திருப்பீர்கள். அன்றைய சூழலில் படிக்காதவனாக இருப்பினும் அவனின் தேடலால் அறிவாளியாக மிளிர்ந்தான். அதனால், 'படிக்காத மேதை' என்ற பெயரை வைத்துப் படம் எடுத்தார்கள். இன்றைய சூழலில், பலரும் படித்திருக்கின்றார்கள், ஆனால், முட்டாள் தனமாகத்தான் நடந்துகொள்கின்றார்கள். அதனால், இன்றைய சூழலில் இவர்களைப்பற்றிப் படமெடுக்க வேண்டுமென்றால், 'படித்த முட்டாள்' அல்லது 'படித்த முட்டாள்கள்' என்றொரு பெயரை வைத்துத்தான் படமெடுக்கவேண்டி வரும்!

*(ரதி, மன்னார்)*

**கே: சின்னச் சின்ன விடயங்களையெல்லாம் ஊதிப் பெருப்பிப்பவர்களைப் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

**ப:** இப்பேர்ப்பட்டவர்களைக் கணக்கில் எடுக்காதீர்கள், ரதி! இப்பேர்ப்பட்டவர்கள் பூதக் கண்ணாடியையோ, பூதக்கண்ணாடி 'லென்சை'யோ அணிபவர்களாக இருக்க வேண்டும்! காரணம் புரிகின்றதா ரதி? அப்போதுதான், புள்ளிகளை எல்லாம் பூதங்களாகக் காட்டமுடியும் என்பதால்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: முற்றவெளி இசைநிகழ்ச்சி குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

**பதில்:** சசி. இசைநிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியவர்களும், இசைநிகழ்ச்சியைச் செய்தவர்களும், இசைநிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றவர்களும் அதாவது ஒட்டுமொத்தமாக இவ்விசை நிகழ்ச்சியோடு தொடர்புடைய எல்லோரும் இன்னும் கொஞ்சம் பண்பாடு அடையவேண்டி இருக்கின்றது.

**கேள்வி: காதலர்தினமும்** (valentine's day) **'லென்ரு'ம்** (lent) - **விபூதிப் புதனும் ஒரே நாளில் வருகின்றது. இரண்டும் ஒரே நாளில் வருவதால் எப்படிக் கடைப்பிடிக்கலாம்?**

**பதில்:** றொக்ஷான், மனிசன், பட்டுத்திரிகின்ற பாட்டுக்கு இந்தக் கேள்வி றொம்ப முக்கியம்!

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 . 05 . 1931 | 24 . 01 . 2024 |



### திருமதி அல்வீனம்மா அகஸ்ரின்

(ஓய்வுநிலை ஆசிரியை)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
(2திமோத்தேயு 4:7)

இல. 3,அடப்பன் வீதி
2ம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்

உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைஞ்சி நிற்கும்
குடும்பத்தினர்

AD-0

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 . 03 . 1945 | 02 . 03 . 2023 |



### அமரர் யூலியற் ஜெயசீலி பெனடிக்ற்

எம் வாழ்வின் சூரியனாகவும்
தொலைவில் தெரியும் சந்திரனாகவும்
நாம் சாயும்போது தாங்கும் சுமைதாங்கியாகவும்
எமை வழிநடத்தும் ஆசானாகவும்
தன்னிகரில்லாத தாயாகவும்
எமக்கு வாழ்வளித்த தெய்வம்
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுகின்றோம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித.
யுவானியார் ஆலயத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 2ம் திகதி காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி

27, சுவாட்ஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 . 12 . 1952 | 26 . 02 . 2023 |



### அமரர் அன்ரன் சின்னராசா பிலிப்

செயலை விதைத்த 'சின்னா'
நல்மணிகளைப் போகும்
வழியெங்கும் விதைத்த பயணி
வரலாற்றைப் பதிந்த வரலாறாய்
தமிழருக்கு வாய்த்த பயன் நீ

மறையையும் தமிழையும்
கண்ணெனக் கொண்டோன்
தவத்திரு அடிகள் புகழ் ஓம்பும் செயலோன்
தொலை நோக்கில் பார்வையைப் பதித்தோன்
தொலையா செயலினால் உயர்ந்து நிலைத்தோன்

சொற்களை மருந்தாக்கி
செயல்களை விதைத்தோன்
கற்கள் வந்த வழி நோக்கி
சொற்களைக்கூட கொடுத்தறியோன்

ஒலியை விட எழுத்து நிலையானது
என்ற நம்பிக்கையின் சொந்தக்காரன்

ஓயாது இயங்கியவன்
அனைத்தையும் இயக்கியவன்
மேடைகளில் முகப்புகளைவிட
திரைச்சீலைகளின் மறைப்புகளே
இவனை அதிகம் அறிந்திருந்தன
ஏதிலியாய் வந்தவருக்கும்
வலுவிழந்து நொந்தவருக்கும்
உறுதியான போக்கிடம் நீ
விதைத்தவன் நீ உறங்கிவிட்டாய்
விதைகள் உறங்காது
கண் உறங்கு...

இவரின் பிரிவால் துயருறும் - குடும்பத்தினர்

## அருட்பணி பென்சமின் அல்பிரட்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அவரைப் பல துறவற சபைகள் தங்கள் ஆன்மீகக் குருவாகவும், வழிகாட்டியாகவும், உளவளத் துணையாளராகவும் விருப்புடன் தெரிந்தெடுத்தனர்.

அமரத்துவமடைந்த மேதகு ஆயர் எமிலியானுஸ்பிள்ளை தனக்குத் தேவையான செயலாளரைத் தெரிவு செய்த போது ஆயருக்காக எதையும் தான் தியாகம் செய்யத் தயார் என்ற மனப்பாங்குடன் தனது சொந்தத் தேவைகளையும், விருப்புக்களையும் துறந்து அவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப பணிபுரிந்தரர். மென்மையான குழந்தை உள்ளமும், எளிமையும், கனிவான பண்பும் அவரது சொத்தாகும். இயேசுவின் தாழ்ச்சியுள்ளத்தை மனதார விரும்பித் தனதாக்கிக் கொண்டு அவரைப் பின்பற்றி வாழ்ந்தார். இலக்கிய ஆர்வம் கொண்ட வீரிய எழுத்தாளருமானவர். கத்தோலிக்க செய்தி பத்திரிகைகளுக்கும், பாதுகாவலன் பத்திரிகைக்கும் அவருடைய பங்களிப்பை பாரிய அளவில் கொடுத்தார்.

அருட்சகோதரி தெரேஸ்ராணி, அ. கா.

தனது குருத்துவ வாழ்க்கையில் தைரியமாக உண்மைக்குச் சான்று பகன்று, மன உறுதியுடனும், ஆர்வத்துடனும் மக்களின் ஆழ்ந்த அன்புடனும் அவர் அரும்பாடு பட்டுழைத்தார். அவருடைய இறுதிக்காலங்களில் சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயப் பங்குத் தந்தையாகப் பணியாற்றியபோது அங்கிருந்த செபமாலைத் தாசர் சபையினருக்கு ஆன்மீகக் குருவாகவும் இயங்கினார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர் நீண்ட நேரம் தனது நேரத்தை நற்கருணைநாதருடன் செலவிட்டு, பாவசங்கீர்த்தனத்தை வழங்கி மக்களுக்கு ஆன்மீகக் குருவாக விளங்கினார். தியாக உணர்வுடன் தனக்கிருந்த இருதய நோயையும் கவனியாது யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தினால் நடாத்தப்பட்ட வகுப்புகளுக்குச் சென்று வந்தார். வெயிலோ, மழையோ என்றாலும் நேரம் காலம் தவறாது தனது உதவியை தாராள மனத்தோடு கொடுத்து அவ்வகுப்புகளைத் திறம்பட நடாத்தினார். 1974 ஆம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதிதான் அவருடைய இறுதி வகுப்பாக இருந்தது. அன்றைய தினம் வகுப்பினை நடாத்தியபோது தெய்வீக சக்தியால் உந்தப்பட்டு இறுதியாக புனித பவுலின் பின்வரும் வார்த்தைகளை உரைத்தார். இவ்வுலகு சார்ந்தவை பற்றியல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்து விட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்" ( கொலோசியர் 3: 2-4 ) அவ்விடத்திலேயே அன்றையதினம் வகுப்பு முடிந்தவுடன் இருதய நோவுற்று மாரடைப்பினால் இறந்தார். உடனடியாக வைத்தியர் அழைக்கப்பட்டாலும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. இறைவனின் தகுந்த நேரம் அவரை அழைத்தது. வைத்தியசாலைக்குச் செல்ல முன்பே அவர் மறை மாவட்ட ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் கையிலிருந்த வண்ணம் அவரின் ஆவி இறைவனடி சேர்ந்தது. இது ஓர் அதிர்ச்சிக்குரிய, துயரம் தரும் சம்பவமாகவிருந்தது. எனினும், அவரது புனிதமான வாழ்வினால் எமக்கு அவர் ஆறுதலாகவும், அருளைத் தூண்டும் முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் மிளிர்கின்றார்.. இதுதான் அவர் எமக்கு விட்டுச்சென்ற சொத்தாகும். இந்த விதை மடிந்ததால் இன்னும் அளப்பரிய விதைகள் அமல மரித்தியாகிகளின் சபை பெற்றுள்ளதை நாம் அறிந்து மகிழ்கின்றோம். இவரது ஆன்மா இறைவனில் சங்கமித்து இறை சந்நிதானத்தில் நித்திய வாழ்வில் மகிழ்ந்திருக்க இறைவனை வேண்டுவோம்.

# குருநகர்ப் பங்கில் திருப்பாலத்துவ சபை விழா



குருநகர்ப் பங்கின் திருப்பாலத்துவ சபை விழா கடந்த 04.02.2024 நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி அ. ஜொ. யாவிஸ் அடிகளார் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. திருப்பலியின் நிறைவில் சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

உதவிப் பங்குத்தந்தையின் வழிகாட்டலில், ஊக்குவிப்பாளர்களின் நெறிப்படுத்துதலில் சிறுவர்கள் பாடல்கள், ஆடல்கள், நாடகம், பேச்சு வழியாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். அத்துடன் ஓய்வுபெற்ற ஆயர் மற்றும் அருட்தந்தையர்களைச் சந்தித்து நலம் விசாரித்து பழங்கள் கொடுத்து மகிழ்ந்தார்கள்

# இரு நூல்கள் வெளியீடு



திரு. ஞானப்பிரகாசம் மரியதாஸ் அவர்கள் எழுதிய காற்றலை மற்றும் திசை மாறிய பறவை ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

வடமராட்சி வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி வளர்மதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவத் துறைப் பேராசிரியர் ஜேம்ஸ் றொபின்சன் அவர்கள் கலந்து நூல்களை வெளியிட்டு வைத்தார்.

# துறவற வார்த்தைப்பாட்டில் 50வது ஆண்டு நிறைவு



திருச்சிலுவை கன்னியர் சபையை சேர்ந்த அருட்சகோதரி கிளேயா சுவானி அவர்களின் துறவற வார்த்தைப்பாட்டின் 50ஆம் ஆண்டு யூபிலி நிகழ்வு கடந்த 7ஆம் திகதி வவுனியா இளமருதங்குளம் புனித கார்மேல் மாதா ஆலயத்தில் நடைபெற்றது.

ஓமந்தைப் பங்குத்தந்தை அருட்தந்தை அமல்ராஜ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தலைமைதாங்கி நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து அருட்சகோதரிக்கான கௌரவிப்புக்களும் இந்நாளை சிறப்பிக்கும் முகமாக மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்டங்களைச் சேர்ந்த குருக்கள், துறவிகள் அருட்சகோதரியின் உறவினர்கள், பங்குமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# குருத்துவ வைர விழாவில் நன்றித் திருப்பலி



குருத்துவ வாழ்வில் 60 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருட்பணி J.E. ஜெயசீலன் அடிகளார் அச்சுவேலி புனித செபமாலைக் கன்னியர் மடத்தில் அருட்சகோதரிகளுடன் இணைந்து இறைவனுக்கு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

# குருநகரில் புனித ஜோசப் வாஸ் இளையோர் கலை விழா



புனித ஜோசப்வாஸ் திருவிழாவை முன்னிட்டு குருநகர் புனித யோசப்வாஸ் இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட கலைவிழா கடந்த 8ஆம் திகதி குருநகர் கலையரங்கில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை A.J. யாவிஸ் அடிகளின் வழிகாட்டலில் ஒன்றியத் தலைவர் செல்வன் விக்ரர்குமார் சுரேன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புனித ஜோசப்வாஸ் திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றதுடன் 'இறைத் திட்டம் தேடும் இளையோர்' என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டும் 'சமூகத்தில் இளையோர் தூண்களா? துன்பங்களா?' என்னும் தலைப்பில் பட்டிமன்றமும், 'ஊனக்கண்' என்னும் சமூக நாடகமும் மேடையேற்றப்பட்டன.இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை விரிவுரையாளர் அருட்தந்தை ம. ரவிச்சந்திரன் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

# புனித வின்சென் டி போல் தேசிய சபையின் இயக்குநர் யாழ்.வருகை



புனித வின்சன் டி போல் சபை தேசிய மாதாந்த ஒன்றுகூடல் கடந்த 17ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

புனித வின்சன் டி போல் சபை தேசிய இயக்குநர் அருட்தந்தை யூட்ராஜ் பெர்னான்டோ அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புனித வின்சன் டி போல் சபையினரால் முன்னெடுக்கப்பட்ட முன்னெடுக்கப்படவுள்ள கடந்தகால மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, புனித வின்சன் டி போல் தேசிய சபைத் தலைவர் ஏனைய மறைமாவட்டங்களின் மத்தியசபைத் தலைவர்கள், பிரதிநிதிகளெனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சிறார் சிறாருக்கு உதவி



மானிப்பாய் புனித அன்னாள் ஆலயப் பீடப்பணியாளர்களும் புதுமடம் கர்த்தர் ஆலயப் பீடப்பணியாளர்களும் இணைந்து, உட்கார்ந்து கல்விகற்கக் கதிரை இல்லாத மூன்று மாணவர்கள் உள்ள குடும்பம் ஒன்றுக்கு நான்கு கதிரைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

இந்நிகழ்வு கடந்த 17ஆம் திகதி மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அடிகளின் வழி காட்டலில் பீடப்பணியாளர்கள் தாங்கள் மாதாந்தம் சேகரித்த சந்தாப்பணத்திலிருந்து பெறப்பட்ட ஒரு தொகை நிதியைக்கொண்டு இக்கதிரைகளைக் கொள்வனவு செய்து தேவையில் உள்ள மாணவர்களுக்கு வழங்கியுள்ள இச்செயற்பாடு பலரது பாராட்டினையும் பெற்றுக்கொண்டுள்ளது.

# பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிய பொது நிலையினர் பணியகம்



பாசையூர்ப் பங்குப் பணிமனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த பொதுநிலையினர் பணியகக் கட்டடக் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டடத் திறப்பு விழா கடந்த 09ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் கலந்து புதிய கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட இக்கட்டடத்திற்கு ஆயர் விக்ரர் ஞானப்பிரகாசம் பொதுநிலையினர் பணியகம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# புதிய பங்குத்தந்தையர்கள் நியமனம்

**புங்குடுதீவு**



புங்குடுதீவுப் பங்குத்தந்தையாக அருட்பணி அ.லியான்ஸ் அடிகளார் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 18.02.2024 ஞாயிறு அன்று குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரால் புதிய பணிப் பொறுப்பு வழங்கப்பட்டது.

**வலைப்பாடு**



வலைப்பாடுப் பங்குத்தந்தையாக அருட்பணி ஹெ.எரோனியஸ் அடிகளார் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர் களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 18.02.2024 ஞாயிறு அன்று குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரால் புதிய பணிப் பொறுப்பு வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.